தினமணி

யூரியா தட்டுப்பாடு:விவசாயிகள் கவலை

First Published : 17 Nov 2011 05:40:25 AM IST
Last Updated : 17 Nov 2011 06:08:18 AM IST



கடலூர், நவ. 15: கடலூர் மாவட்டத்தில் யூரியா தட்டுப்பாடு காரணமாக, நெல் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளனர்.

கடலூர் மாவட்டத்தின் டெல்டா பகுதியில் 1.45 லட்சம் ஏக்கர் உள்பட, 2.5 லட்சம் ஏக்கரில் சம்பா நெல் நாற்று நடவு முடிவடைந்து உள்ளது. இவற்றில் சுமார் 1.5 லட்சம் ஏக்கர் நெற்பயிருக்கு, உடனடியாக யூரியா தேவைப்படுகிறது. ஆனால் போதுமான அளவு யூரியா கிடைக்காததால் விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனால் நெல் உற்பத்தி வெகுவாக பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டு உள்ளது.

பொட்டாஷ் உரத்தேவை முழுமைக்கும் இந்தியா, வெளிநாடுகளையே நம்பி இருக்கிறது. டி.ஏ.பி. உரத்தேவையில் 80 சதம் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுகிறது.

இந்தியாவில் யூரியா உற்பத்தி செய்யும் ஆலைகள் பல இருந்தும், பெட்ரோலிய பொருள்கள் விலையேற்றம் காரணமாக பல ஆலைகள் யூரியாவை உற்பத்தி செய்யாமல் வெளிநாடுகளில் இருந்து வாங்கி விற்பனை செய்யத் தொடங்கி இருக்கின்றன.

இந்திய தேவைக்கான யூரியாவில் 80 சதம் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யும் நிலை ஏற்பட்டு உள்ளது.

இதனால் ரசாயன உரங்களுக்கு தமிழகத்தில் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. கடலூர் மாவட்ட யூரியா தேவை குறித்து வேளாண் அதகாரி ஒருவர் கூறியது:

கடலூர் மாவட்டத்தில் பயிரிடப்பட்டு உள்ள சுமார் 2.5 லட்சம் ஏக்கர் நெற்பயிரில் 1.5 லட்சம் ஏக்கர் பயிருக்கு நவம்பர் மாதத்துக்கு மட்டும், 8 ஆயிரம் டன் யூரியா தேவைப்படுகிறது.

ஆனால் கடந்த வாரம் 1,400 டன் யூரியா கடலூர் மாவட்ட கூட்டுறவு சங்கங்களுக்கு டான்ஃபெட் நிறுவனம் மூலம் வழங்கப்பட்டது. தனியார் உரக் கடைகளுக்கு கடந்த வாரம் 800 டன் யூரியா வழங்கப்பட்டது. மேலும் 600 டன் யூரியா தனியார் கடைகளுக்கு வந்து கொண்டு இருக்கிறது.

மேலும் 1,500 டன் யூரியா கடலூர் மாவட்டத்துக்கு உடனடி தேவையாக உள்ளது. தமிழ் நாட்டுக்குத் தேவையான யூரியா, கப்பல் மூலம் ஆந்திர மாநிலம் கிருஷ்ணப்பட்டினம் துறைமுகத்துக்கு கொண்டு வரப்பட்டு இருப்பதாகக் கூறப்படுகிறது.

இது, கடலூர் மாவட்டத்துக்கு ரயில் வேகன்கள் மூலம் விருத்தாசலம் கொண்டு வரப்பட்டு, அங்கிருந்து விநியோகிக்கப்படும் என்றார். மாவட்ட உழவர் மன்றங்களின் கூட்டமைப்பு தலைவர் பி.ரவீந்திரன் கூறுகையில்,

இப்போது பயிரிடப்பட்டுள்ள சம்பா நெற்பயிருக்கு யூரியா அத்தியாவசியத் தேவையாக உள்ளது. யூரியா பற்றாக்குறை பயிர்களை பெரிதும் பாதிக்கும்.

கடந்த வாரம் கூட்டுறவு சங்கங்களுக்கு விநியோகிக்கப்பட்ட 1,400 டன் யூரியா முழுவதும் ஒரு மணி நேரத்தில் காலியாகிவிட்டது. கூட்டுறவு சங்கங்களில் கடன் பெற்ற விவசாயிகளுக்குத்தான் யூரியா வழங்கப்பட்டது. மற்றவர்கள் தனியார் கடைகளைத்தான் நம்பி இருக்கிறார்கள்.

ஆனால் அங்கும் யூரியா கிடைப்பது இல்லை. பலர் அதிக விலைக்கும் விற்கிறார்கள். கப்பல் மூலம் மேற்கொண்டு யூரியா வந்துகொண்டு இருப்பதாக வேளாண் அதிகாரிகள் தெரிவிப்பதாக தெரிவித்தார்.

**கண்ணீரை வரவழைக்கும் மிளகாய் விலை**

வி. தேவதாசன்

First Published : 17 Nov 2011 04:03:54 AM IST



சென்னை: மிளகாயின் காரத்தால் கண்ணீர் விடாதவர்கள் கூட, மிளகாயின் விலையைக் கேட்டால் கண்ணீர் விடும் அளவுக்கு இப்போது தமிழ்நாட்டில் காய்ந்த மிளகாய் விலை மிகக் கடுமையாக அதிகரித்துள்ளது.

தமிழ்நாட்டின் மிளகாய்த் தேவையில் பெரும்பகுதி தென் மாவட்டங்களில் விளையும் மிளகாய் மூலமே பூர்த்தி செய்யப்படுகிறது. விருதுநகர், ராமநாதபுரம், சிவகங்கை போன்ற மாவட்டங்களில் பெருமளவு மிளகாய் சாகுபடி செய்யப்படுகிறது. இதுதவிர ஆந்திராவிலிருந்தும் தமிழ்நாட்டுக்கு மிளகாய் வருகிறது.

குண்டு மிளகாய், நீட்டு மிளகாய் என இரண்டு வகைகள் இருந்தாலும் பச்சை மிளகாய்க்கு நீட்டு மிளகாயைப் பயன்படுத்தும் தமிழ்நாட்டு மக்கள், காய்ந்த மிளகாய்க்கு குண்டு மிளகாயையே விரும்பிப் பயன்படுத்துகின்றனர். குண்டு மிளகாய் மிதமான காரம் கொண்டதாக இருப்பதே இதற்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

தென் மாவட்டங்களில் மிளகாய் அறுவடை செய்யப்படும் பிப்ரவரி முதல் மே மாதம் வரையில் காய்ந்த மிளகாயின் விலை கடைகளில் குறைவாக இருப்பதும், மற்ற மாதங்களில் சற்று அதிகமாக இருப்பதும் வழக்கமானதுதான். கடந்த ஆண்டு காய்ந்த குண்டு மிளகாய் ஒரு கிலோ ரூ.150 வரை விற்கப்பட்டது. இது கடுமையான விலை உயர்வாக அப்போது பேசப்பட்டது.

இந்நிலையில் சென்னையில் இப்போது ஒரு கிலோ காய்ந்த குண்டு மிளகாய் விலை ரூ.200-ஐ கடந்து, ரூ.220-க்கு விற்கப்படுகிறது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்துக்குச் சொந்தமான அமுதம் அங்காடிகளில் கூட ரூ.220-க்குதான் விற்பனை செய்யப்படுகின்றன. நீட்டு மிளகாய் ரூ.150 வரை விற்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் மிளகாய் விலை ரூ.200-ஐ கடந்து விற்பனை செய்யப்படுவது இதுவே முதல் முறை என்கிறார் தமிழ்நாடு அனைத்து மளிகை வணிகர்கள் சங்கத் தலைவர் எஸ்.பி. சொரூபன்.

இந்த ஆண்டு மிளகாய் விளைச்சலில் குறிப்பிடத்தக்க அளவில் எந்த பாதிப்பும் இல்லை. எனினும் ஆன்லைன் வர்த்தகம் என்ற சூதாட்ட வணிக முறையும், சில தரகர்களுமே இந்த வரலாறு காணாத விலை உயர்வுக்குக் காரணம். ஆயிரக்கணக்கான மிளகாய் மூட்டைகளைப் பதுக்கி வைத்துள்ள இந்தக் கள்ளச் சந்தைக்காரர்கள், செயற்கையான தட்டுப்பாட்டை ஏற்படுத்தியுள்ளதாலேயே இந்தக் கடுமையான விலை உயர்வு ஏற்பட்டுள்ளது. இதனால் மளிகை வியாபாரிகளும், பொதுமக்களும் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே தமிழ்நாட்டின் முக்கிய ஊர்களில், ஊகபேர வணிகத்தில் ஈடுபடும் கள்ளச் சந்தைக்காரர்களால் பதுக்கி வைக்கப்பட்டுள்ள காய்ந்த மிளகாயை உடனடியாகச் சந்தைக்குக் கொண்டுவர தமிழக அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றார் சொரூபன்.

ஒரு பக்கம் ஒரு கிலோ காய்ந்த மிளகாய் ரூ.220 என விற்கப்படும் அதே வேளையில், மிளகாய் உற்பத்தி செய்யும் தமிழ்நாட்டு விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்கவில்லை.

இது குறித்து கருத்துத் தெரிவித்த தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் ராமநாதபுரம் மாவட்டச் செயலாளர் கே. சுப்பிரமணியன், மிளகாய் அறுவடை காலமான பிப்ரவரி முதல் மே மாதம் வரையிலான காலத்தில் இந்த ஆண்டு விவசாயிகளுக்கு ஒரு கிலோ காய்ந்த மிளகாய்க்கு அதிகபட்சம் ரூ.40 வரை விலை கிடைத்தது. வீட்டில் மிளகாயைப் பத்திரப்படுத்தி இப்போது விற்கும் விவசாயிகளுக்கு அதிகபட்சம் ரூ.95 வரை கிடைக்கிறது.

ஆனால் விவசாயிகளிடம் அடிமாட்டு விலைக்கு வாங்கிச் சென்று பதுக்கி வைத்து விற்கும் கள்ளச் சந்தைக்காரர்கள் கொள்ளை லாபம் பெறுகிறார்கள் என்றார்.

வரலாறு காணாத இந்த விலை உயர்வைக் கட்டுப்படுத்தி, காய்ந்த மிளகாயை பொதுமக்கள் வாங்கும் விலைக்கு குறைப்பதற்கான நடவடிக்கைகளை தமிழக அரசு உடனடியாக எடுக்க வேண்டும் என்பதே அனைத்துத் தரப்பு மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

"கறவை மாடு வைத்திருப்பவரே தீவனப் பயிர் வளர்க்கலாம்'

த. தேவராஜ்

First Published : 17 Nov 2011 01:24:40 AM IST



கடலூர் : தமிழகத்தில் பால் தேவை எப்போதும் அதிகரித்துக் கொண்டே வருகிறது. இப்போதையை பால் உற்பத்தி, நமது தேவையை முழுமையாகப் பூர்த்தி செய்வதாக இல்லை.

பால் தட்டுப்பாடுதான் பல்வேறு கலப்படங்களுக்கும், விலையேற்றத்துக்கும் மூலகாரணம். எனவே பால் உற்பத்தியைப் பெருக்குவதன் மூலம் கலப்படமற்ற, சுத்தமான பாலை நியாயமான விலையில் பெறமுடியும்.

பால் உற்பத்தியைப் பெருக்க தமிழகத்தில் இன்னமும் நிறைய கறவை மாடுகள் வளர்க்கப்பட வேண்டும். நிறைய மாட்டுப் பண்ணைகள் உருவாக வேண்டும். எனவே தான் தமிழக அரசு மாடு வளர்ப்புக்கு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது. இலவசமாகவும் மானியத்திலும் கறவைமாடுகள் வழங்கப்படுகின்றன. மாடுகள் அதிக அளவில் வளர்க்க மேய்ச்சல் நிலம் தேவை. ஆனால் மேய்ச்சல் நிலங்கள் எல்லாம் காணாமல் போய் பல ஆண்டுகள் ஆகிவிட்டன.

இதனால் மாடுகளுக்கான தீவனப் புல் கிடைப்பதில் பெருமளவு தட்டுப்பாடு நிலவி வருகிறது. கறவை மாடுகளுக்கு கால் பங்கு வைக்கோல், அரைப் பங்கு பசுந் தீவனம், கால் பங்கு கடைகளில் கிடைக்கும் ஏனைய தீவனங்கள் கொடுத்தால் மாடுகள் ஆரோக்கியமாகவும், நிறைய பாலும் கறக்கும். பராமரிப்புச் செலவும் குறையும் என கால்நடை மருத்துவர்கள் கூறுகின்றனர்.

எனவே பால் உற்பத்தியில் தீவனப் பயிர்களின் பங்கு பெரிதும் அங்கம் வகிக்கிறது. 5 மாடுகளுக்கு மேல் வைத்து இருப்பவர்கள் நிச்சயம் தீவனப் பயிர்களை வளர்க்க வேண்டும். அல்லது விலைகொடுத்து வாங்கவேண்டும் என்கிறது கால்நடை பராமரிப்புத்துறை.

வீட்டுக்கு 2 மாடுகள் வைத்திருக்கும் ஐவர் சேர்ந்து, தீவனப் பயிர்களை விளைவிக்கலாம். தீவனப் பயிர்கள் வளர்க்க, கால்நடை பராமரிப்புத் துறை நிறைய மானியம் வழங்குகிறது.

தீவனப்பயிர்கள்: தீவனப் பயிர்களில் முக்கியமானவை தீவன மக்காச் சோளம், தீவனச் சோளம், தீவனக் கம்பு, கினியா புல், தீவன தட்டைப் பயறு, கம்பு நேப்பியர் புல் ஆகியவை.

தீவன மக்காச் சோளத்தில் ஆப்பிரிக்கன் உயரம், டெக்கான், கங்கா, கோ1 என்ற ரகங்கள் உள்ளன. இவற்றுக்கு உரத்தேவை ஹெக்டேருக்கு 40 கிலோ யூரியா, 64 கிலோ சூப்பர் பாஸ்பேட், 16 கிலோ பொட்டாஷ். ஹெக்டேருக்கு 16 கிலோ விதை தேவை. விதைத்த 3-ம் நாள்

தண்ணீர், பின்னர் வாரம் ஒரு முறை நீர்பாய்ச்சினால் போதும். 60-வது நாள் முதல் பூக்கும் வரை தொடர்ந்து அறுவடை செய்யலாம்.

தீவனச் சோளம் கோ 11, கோ 27 என்ற ரகங்கள் கிடைக்கின்றன. இவற்றுக்கு ஹெக்டேருக்கு 12 கிலோ யூரியா, 16 கிலோ சூப்பர் பாஸ்பேட், 8 கிலோ பொட்டாஷ், மேலுரமாக 30-வது நாளில் 12 கிலோ யூரியா இட வேண்டும். விதைத் தேவை ஹெக்டேருக்கு 16 கிலோ. விதைத்த உடன் முதல் தண்ணீரும், 3-ம் நாளில் 2-வது தண்ணீர், பின்னர் 10 நாள்களுக்கு ஒருமுறை நீர்ப் பாய்ச்சினால் போதும். 60 முதல் 65 நாளில் அறுவடை செய்யலாம்.

தீவனக் கம்பு: தீவனக் கம்பு கோ 8 என்ற ரகம் கிடைக்கிறது. இதற்கு ஹெக்டேருக்கு அடியுரமாக 12 கிலோ யூரியா, 96 கிலோ சூப்பர் பாஸ்பேட், 8 கிலோ பொட்டாஷ், மேலுரமாக 21 கிலோ யூரியா இட வேண்டும். விதை அளவு ஏக்கருக்கு 4 கிலோ. 10 முதல் 15 நாள்களுக்கு ஒருமுறை நீர்ப் பாய்ச்சினால் போதும். 40 முதல 45 நாள்களில் அறுவடை செய்யலாம்.

கினியா புல்: ஏக்கருக்கு 20:20:60 கிலோ முறையே தழை, மணி, சாம்பல் சத்துக்களும், மேலுரமாக 10 கிலோ தழைச்சத்தும் இட வேண்டும். ஏக்கருக்கு ஒரு கிலோ விதை தேவை. வேர்க் கரணை ஏக்கருக்கு 20,640. விதைத்த உடன் முதல் தண்ணீர் 3-ம் நாளும், பின்னர் 15 முதல் 20 நாள்களுக்கு ஒருமுறையும் நீர்ப்பாய்ச்சினால் போதும். 50 முதல் 55 நாள்களில் அறுவடை செய்யலாம்.

தீவன தட்டைப்பயறு: இதில் கோ 5 ரகம் கிடைக்கிறது. உரத்தேவை ஏக்கருக்கு அடியுரம் 10:16:8 முறையே தழை, மணி, சாம்பல் சத்துக்கள் இட வேண்டும். ஏக்கருக்கு 14 கிலோ போதுமானது. விதைத்து 3-வது நாளில் முதல் தண்ணீரும், பின்னர் 10 நாள்களுக்கு ஒரு முறையும் நீர்ப் பாய்ச்சினால் போதும். 50 முதல் 55 நாளில் அறுடைக்கு வரும்.

கம்பு நேப்பியர் புல்: என்.பி.21, என்.பி.2, கோ1, கோ2, கோ3 ஆகிய ரகங்கள் கிடைக்கின்றன. விதைக் கரணைகள் ஏக்கருக்கு 16 ஆயிரம் தேவை. அடியுரமாக ஏக்கருக்கு 20:20:16 கிலோ விகிதத்தில் முறையே தழை, மணி, சாம்பல் சத்துக்கள் இடவேண்டும். முதல் தண்ணீர் நடும் போதும், 2-வது தண்ணீர் நட்ட 3-வது நாளிலும் பாய்ச்ச வேண்டும். பின்னர் 10 நாள்களுக்கு ஒருமுறை நீர்ப் பாய்ச்சினால் போதும். முதல் அறுவடை 80 நாள்களிலும், பின்னர் 45 நாள்களுக்கு ஒரு முறையும் செய்யலாம்.

**கறிவேப்பிலை சாகுபடிக்கு மானியம் உண்டு**

First Published : 17 Nov 2011 01:23:18 AM IST



சிதம்பரம் : கறிவேப்பிலை பயிரிட்டால் அதிக லாபம் பெறலாம். எனவே கறிவேப்பிலை பயிரிட விவசாயிகள் முன்வர வேண்டும் என தோட்டக்கலை உதவி இயக்குநர் மோகன்தாஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்த அவரது செய்திக் குறிப்பு:

கடலூர் மாவட்டத்தில் போதிய அளவுக்கு கறிவேப்பிலை சாகுபடி செய்யப்படவில்லை. இதனால் நமது தேவைக்கு அண்டை மாவட்டங்களை எதிர்பார்த்திருக்க வேண்டியுள்ளது.

இதை கருத்தில் கொண்டு கறிவேப்பிலை சாகுபடியை வேளாண்துறை ஊக்குவித்து வருகிறது. இதற்கு துறை மூலம் மானியமும் வழங்கப்படுகிறது.

கறிவேப்பிலை சாகுபடி செய்ய விரும்பும் விவசாயிகள் தோட்டக்கலைத் துறையை அணுகி கறிவேப்பிலை செடிகளை மானியத்துடன் பெற்றுச் செல்லலாம்.

கறிவேப்பிலை அதிக வருமானம் பெற்றுத்தரும் பயிராகும். ஒர் ஆண்டு பயிர் செய்தால் பல ஆண்டுகள் வரை பராமரித்து அதிக வருமானம் பெறலாம்.

நோய், பூச்சி ஆகியவை அதிக அளவில் தாக்காத பயிர் கறிவேப்பிலை ஆகும். இதனை பயிரிட அதிக வேலையாட்கள் தேவையில்லை. பராமரிப்பு செலவும் குறைவு. எனவே விவசாயிகள் கறிவேப்பிலை பயிர் செய்து பயன்பெறலாம் என மோகன்தாஸ் தெரிவித்தார்.

**திசு வாழையில் பூச்சித் தாக்குதலை கட்டுப்படுத்துவது எப்படி?**

First Published : 17 Nov 2011 01:22:01 AM IST



திண்டிவனம் : விழுப்புரம் மாவட்டத்தில் அண்மையில் பெய்த பலத்த மழை காரணமாக திசு வாழையில் பூச்சி நோய் காணப்படுவதாக வேளாண் விஞ்ஞானிகள் குழு ஆய்வில் கண்டுபிடித்துள்ளது. அதற்கான தடுப்பு முறைகளையும் தெரிவித்துள்ளது.

நீர்வள நிலவள திட்டத்தின் கீழ் திண்டிவனம் எண்ணெய் வித்துக்கள் ஆராய்ச்சி நிலையத்தின் சார்பில் 50 ஏக்கர் பரப்பளவில் விவசாயிகள் திசு வாழை சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர். கடந்த அக்டோபரில் பெய்த பலத்த மழை காரணமாக திசு வாழையில் பூச்சி நோய் தாக்குதல் ஏற்பட்டுள்ளதாக விஞ்ஞானிகள் ஆய்வில் கண்டுபிடித்துள்ளனர்.

ஆராய்ச்சி நிலையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் நா.ராமமூர்த்தி மற்றும் வேளாண்மை நிலையத்தின் தலைவர் முனைவர் நா.சாத்தையா தலைமையில் உதவிப்பேராசிரியர்கள் சீனி.அன்புமணி மற்றும் செந்தில்வேல் ஆகியோர் இந்த ஆய்வை மேற்கொண்டனர்.

நோய் தாக்குதல் அறிகுறிகள்: எர்வினியா நோய் தாக்கப்பட்ட வாழையின் இலை சிறுத்து நரம்புகள் கடினமாகவும், இலை வெளிரிய நிறமாக காணப்படும். நோய் தீவிரமடையும் போது இலைகள் காய்ந்திருக்கும். புதிதாக வரும் குருத்துக்கள் சிறுத்து வளராமல் இலை விரிவடையாமல் காணப்படும். கூண் வண்டு தாக்குதலை தொடர்ந்து எர்வினியா என்ற பாக்டீரியா அழுகல் நோய் தீவிரமடையும். பாதிக்கப்பட்ட கிழங்கை இரண்டாக வெட்டிப்பார்க்கும் போது அழுகிய துர்நாற்றத்துடன் அதிக வழவழப்பான திரவம் வெளிப்படும்.

வழிமுறைகள்

* வயலில் நல்ல வடிகால் வசதியினை ஏற்படுத்தி மண்ணில் அதிக ஈரத்தன்மை இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

* மேலும் பாத்தி முறையில் பாசன முறையை தவிர்க்க வேண்டும்.

* முற்றிலும் பாதிக்கப்பட்ட கிழங்கை அப்புறப்படுத்தி கிருமிநாசினியான 2 சதவீதம் பிளீச்சிங் பவுடர் (ஒரு லிட்டர் நீருக்கு 20 கிராம் கரைத்து மண்ணில் தெளிக்க வேண்டும்).

* கூண் வண்டினை கட்டுப்படுத்த 10 முதல் 20 கிராம் கார்பரில் அல்லது 4 கிராம் கார்போபிரான் மருந்தை தண்டுப்பகுதியை சுற்றி தூவி மண்ணை கிளறி விட வேண்டும். இம்முறையை கையாண்டப் பத்து நாள் கழித்து வாழை சக்தி நுண்ணூட்ட கலவையை ஒரு மரத்திற்கு 10 கிராம் அளவில் தண்டுப் பகுதியை சுற்றி தூவி விட்டு சொட்டு நீர் பாசனம் செய்யவும். வாழை விவசாயிகள் இந்த வழிமுறைகளை கடைபிடித்து பயனடையுமாறு வேளாண் விஞ்ஞானிகள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

## சிவகாசி வட்டாரத்தில் 1500 ஹெக்டேரில் மக்காச்சோளம் சாகுபடி

First Published : 16 Nov 2011 12:44:27 PM IST

சிவகாசி, நவ. 15: சிவகாசி வட்டாரத்தில் விவசாயிகள் 1500 ஹெக்டேரில் மக்காச்சோளம் பயிரிட்டுள்ளதாக வேளாண் துறை உதவி இயக்குநர் (பொறுப்பு) எம்.செல்வராணி தெரிவித்தார்.

இது குறித்து அவர் செவ்வாய்க்கிழமை கூறியதாவது:

சிவகாசி வட்டாரத்தில் எரிச்சநத்தம், புதுக்கோட்டை, கீழத்திருத்தங்கல், வாடியூர், மேல ஆமத்தூர் ஆகிய பகுதிகளில் 150 ஹெக்டேரில் திருத்திய நெல் சாகுபடி நடவுப் பணி முடிவடைந்துள்ளது. இப்பணி மேலும் 15 நாள் நடைபெறும்.

மேலும் 200 ஹெக்டேரில் நெல் நடவு செய்யப்படும். நீர்வளத் திட்டம், தேசிய வேளாண்மை விரிவாக்கத் திட்டம் ஆகியவை மூலம் விவசாயிகளுக்கு இடுபொருள் வழங்கப்பட்டுள்ளது.

பாசிப் பயிறு, தட்டாம் பயிறு, உளுந்து ஆகிய பயிறு வகைகள் 125 ஹெக்டேரில் பயிரிடப்பட்டுள்ளது. மானாவாரி பருத்தி 350 ஹெக்டேரில் பயிரிடப்பட்டுள்ளது.

விவசாயிகள் தங்களுக்கு ஏற்படும் சந்தேகங்களை சிவகாசி-சாட்சியாபுரத்தில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையத்தில் கேட்டு நிவர்த்தி செய்து கொள்ளலாம் என்றார்.

**பாசனத்துக்காக பாபநாசம் அணை திறப்பு**

அம்பை ஷேக்

First Published : 16 Nov 2011 06:18:03 PM IST

Last Updated : 16 Nov 2011 09:40:54 PM IST




அம்பாசமுத்திரம், நவ.16: திருநெல்வேலி மாவட்டத்தில் தாமிரபரணி நதிக்கரை பாசனத்துக்காக பாபநாசம் அணை திறக்கப்பட்டது.

அண்மையில் பெய்த மழையில் அணையில் ஓரளவு நீர் நிரம்பியது. தற்போது அணையில் 104 அடி நீர் உள்ளது.

16.11.2011 அணைகளின் நீர்மட்டம் நிலவரம்:

பாபநாசம் அணை 104.15 அடி

சேர்வலாறு அணை 117.32 அடி

மணிமுத்தாறு அணை 56.47 அடி

கடனாநதி அணை 79.70 அடி

ராமநதி அணை 70.75 அடி

தினமலர்

உண்மையின் உரைகல்

**இயற்கை விவசாயிகளுக்கு பவர் ஸ்பிரேயர் வழங்கல்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 17,2011,02:08 IST

விழுப்புரம் : விக்கிரவாண்டி சிகோடி தொண்டு நிறுவனம் சார்பில் பாரம்பரிய இயற்கை விவசாயிகளுக்கு பவர் ஸ்பிரேயர் வழங்கும் விழா நடந்தது.சிகோடி எம்மாவுஸ் தோட்டத்தில்

நடந்த விழாவிற்கு இயக்குனர் நிர்மலா தலைமை தாங்கினார். விக்டர் முன்னிலை வகித்தார். நிறுவன தலைவர் சகாயராஜ் வரவேற்று பேசினார். தமிழ்நாடு ஆர்கானிக் சான்று நிறுவன ஆய்வாளர் சத்தியமூர்த்தி கலந்து கொண்டு விவசாயிகளுக்கு ஸ்பிரேயர் வழங் கினார். சுற்றுப்புற கிராம விவசாயிகள் கலந்து கொண்டனர். கள மேற்பார்வையாளர் மங்கள மேரி நன்றி கூறினார்.

**பருத்தி பயிரை பாதுகாக்க வேளாண்துறை அறிவுரை**

பதிவு செய்த நாள் : நவம்பர் 17,2011,02:16 IST

கருத்தை பதிவு செய்ய

தர்மபுரி: மழைக்குப் பின் பயிர் சேதம், பூச்சி தாக்குதல் ஆகியவற்றிலிருந்து பருத்தி பயிர்களை பாதுகாக்க, வேளாண் துறை அறிவுரை வழங்கியுள்ளது.

இது குறித்து மாவட்ட வேளாண் துறை வெளியிட்ட அறிக்கை:மானாவாரி பருத்தியில் மழைக்குப் பின், அதிக அளவு சாறு உறிஞ்சும் பூச்சிகளான தத்துப்பூச்சி, இலைப்பேன், அசுவினி உள்ளிட்ட பூச்சிகளின் தாக்குதல் காணப்படுகிறது. சாறு உறிஞ்சும் பூச்சிகளால் தாக்கப்பட்ட பருத்திச் செடியின் நுனிப் பகுதி இலையில் அதிக அளவு சாறு உறிஞ்சப்படுவதால், இலைகள் வெளிர் மஞ்சள் நிறமாக மாறுவதுடன், இலையின் ஓரப் பகுதிகள் சிவப்பாக மாறி இலையின் உள் பாகத்துக்கு பரவுவதுடன், செடியின் வளர்ச்சி குன்றியிருக்கும்.

மேலும், பூச்சிகள் தாக்கப்பட்ட இலைகள் மிருதுவாக இல்லாமல் மொரமொரப்பாகவும் கடுமையாகவும் இருக்கும் இந்தப் பூச்சியைக் கட்டுப்படுத்த இமிடா குளோப்ரிடி, 17.8 எஸ்.எஸ் என்னும் மருந்தை, ஒரு லிட்டர் தண்ணீருக்கு ஒரு மில்லி என்ற அளவில் கலந்து தெளிக்க வேண்டும். பருத்தி பயிரில் தற்போது, இலைப்புள்ளி நோய் மற்றும் இலைக்கருகல் நோய் காணப்படுவதால், நோய் தாக்கப்பட்ட இலைகள் கருப்பு நிறங்களில் ஒழுங்கற்ற நிலையில் காணப்படும்.

பாதிக்கப்பட்ட இலைகள் கருகி, உதிர்ந்து விடும். இதைக்கட்டுப்படுத்த ப்ரபிகோனசோல்(டில்ட்) என்ற மருந்தை, ஒரு லிட்டர் தண்ணீர் ஒரு மில்லி என்ற அளவில் கலந்து தெளித்துக் கட்டுப்படுத்தலாம். மேலும், இலையின் நிறம் சிவப்பாக மாறும் பகுதிகளில் ஒரு லிட்டர் தண்ணீருக்கு மக்னீசியம் சல்பேட், 10 கிராம் துத்தநாக சல்பேட், 5 கிராம் மற்றும் நீரில் கரையகூடிய, 19:19:19 உரம், 10 கிராம் ஆகியவற்றை கரைத்து தெளிக்க வேண்டும். இதுபோன்ற பயிர் பாதுகாப்பு முறைகளை மேற்கொண்டால் பருத்தியில் அதிக மகசூல் பெறலாம்.

**ஏலத்துக்கு வரும் வாழைத்தார் வெயிலில் வாடும் அவலம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 17,2011,00:50 IST

கோபிசெட்டிபாளையம்: கோபி வேளாண் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் போதிய வசதி இல்லாததால், வாழைத்தார்கள் வெயிலில் வாடுகின்றன.கோபி வேளாண் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் சனி மற்றும் புதன் கிழமைகளில் வாழைத்தார் ஏலம் நடக்கிறது. பெருந்துறை, கவுந்தப்பாடி, பங்களாப்புதூர், கள்ளிப்பட்டி, டி.என்.பாளையம், கோபி, கொளப்பலூர், கூகலூர் உள்ளிட்ட பல்வேறு பகுதியை சேர்ந்த விவசாயிகள், கதளி, நேந்திரம், ரோபஸ்டா, ரஸ்தாளி, மொந்தன், பச்சைவாழை, பூவன், தேன் வாழை ஆகிய ரக வாழைத்தார்களை, நேரடியாக விற்பனை செய்கின்றனர். ஈரோடு, சேலம், கோவை, கர்நாடகா உள்ளிட்ட பகுதியை சேர்ந்த வியாபாரிகள் ஏலம் எடுத்து செல்கின்றனர்.வாழை விற்பனை தொகையில், இரண்டு சதவீதம் விவசாயிகளிடம் கமிஷன் பெறப்படுகிறது.

எனினும், விவசாயிகளுக்கு தேவையான அடிப்படை வசதிகளை, வேளாண் கூட்டுறவு விற்பனை சங்கம் செய்து தரவில்லை. வாழை சீஸன் இல்லாத நேரத்தில் கூட்டுறவு சங்கத்துக்கு, 5,000 முதல் 6,000 தார் வரத்தாகும். தற்போது, அறுவடை சீஸன் என்பதால், 7,500 தார் வரை வரத்தாகிறது. 2,000 முதல் 3,000 தார் மட்டுமே நிழலில் வைக்க இட வசதியுள்ளது. மற்ற தார்கள் வெயிலில் வைக்க வேண்டியுள்ளது.சில நாட்களாக அதிகளவில் வெயில் அடிப்பதால், வெயிலில் உள்ள தார்கள் வாடி வதங்குகின்றன. வெயிலில் உள்ள வாழைக்கு சரியான விலை கிடைக்காததால் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.விவசாயிகள் கூறியதாவது: சில மாதங்களுக்கு முன் வரை வாழைத்தார்களை பாதுகாப்பாக வைக்க வசதி இருந்தது. விதை நெல் மூட்டை வைக்க புதிய குடோன் கட்டியபோது, இங்கு அமைக்கப்பட்டு இருந்த பந்தல் பிரிக்கப்பட்டது. மீண்டும் பந்தல் அமைக்கப்படவில்லை.

வாழை அறுவடை சீஸன் என்பதால் விற்பனை சங்கத்துக்கு, 7,500 வாழைத்தார் வரத்தாகிறது. 3,000 தார் வரை வைக்க இட வசதி உள்ளது. முதலில் வரும் நபர்கள் இங்கு வைக்கலாம். உள்ளூர் விவசாயிகள் விரைவில் வந்து விடுவர். பெருந்துறை உள்ளிட்ட பகுதியில் இருந்து வரும் விவசாயிகள் தாமதமாக வரவேண்டி இருக்கும். இவர்கள் கான்கிரீட் தளத்தில் தார் வைக்க வேண்டியுள்ளது. வெயில் காரணமாக கான்கிரீட் தளம் சூடேறி, தார் வதங்கி விடுகிறது; போதிய விலை கிடைக்காது.

கமிஷன் தொகை இரண்டு சதவீதமாக குறைக்கப்பட்டதால் விவசாயிகளுக்கு தேவையான வசதியை, செய்து தருவதில் கூட்டுறவு சங்கம் தயக்கம் காட்டுகிறது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

**குறைந்தது விலை; குறையவில்லை விரக்தி!**

பதிவு செய்த நாள் : நவம்பர் 17,2011,00:11 IST

கருத்தை பதிவு செய்ய

"இப்படியும் நடக்குமோ' என்று பலருக்கும் ஆச்சர்யம். "உலக அதிசயம் ஒன்று, இந்தியாவில் நிகழ்ந்து விட்டது' என்கின்றனர், பலர். பெட்ரோல் விலையை, குறைத்து மத்திய அரசு வெளியிட்ட அறிவிப்பு தான், இப்படி பலரையும் வியப்பில் ஆழ்த்தி விட்டது.விலை உயர்வை மட்டுமே பார்த்தும், அனுபவித்தும் பழகிய மக்கள், திடீரென பெட்ரோல் விலை குறைக்கப்பட்டதாக அறிவிப்பு வெளியானதும், அதிர்ச்சியில் உறைந்து விடுகின்றனர். ஆனாலும், "லிட்டருக்கு ரூ.2.35 மட்டுமே குறைத்தது போதுமானதல்ல; இந்த குறைப்பால் யாருக்கும் பயனில்லை' என்றே பலரும் கருத்து கூறுகின்றனர்.ராஜா (கோவை ரெட்பீல்ட்ஸ்): அடிக் கடி பெட்ரோல் விலையை உயர்த்தி வந்தனர். கடைசியாக உயர்த்தியபோது, மம்தா பானர்ஜி கடுமையாக எதிர்ப்பு தெரிவித்ததுடன், "கூட்டணி அமைச்சரவையில் இருந்து விலகுவோம்' என்றும் மிரட்டி விட்டார். அவரை சமாதானம் செய்வதற்காகவே, இப்போது பெட்ரோல் விலையை குறைத்துள்ளனர். எனவே, விலைக்குறைப்பு நடவடிக்கையில், அரசியல் ஆதாயம் தான் தெரிகிறது; மக்களுக்கு பெரிதாக பயனில்லை.ரவிக்குமார் (காந்திபுரம்): விலையை உயர்த்திக் கொண்டே இருந்தவர்கள், இந்த ஒரு முறை மட்டும்,"போனால் போகட்டும்' என்று, குறைத்து விட்டனர். கச்சா எண்ணெயின் சர்வதேச விலை நிலவரத்துக்கு ஏற்ப குறைத்ததாக கூறுகின்றனர். அடுத்தமுறை வாய்ப்பு வரும்போது, இப்போது குறைத்ததற்கும் சேர்த்து உயர்த்தி விடுவர். சுகுமார் (பீளமேடு): இப்போதைய விலை குறைப்பில், மக்களுக்கு பெரிதாக லாபம் எதுவும் இல்லை. 20 ரூபாய் விலை உயர்த்தி விட்டு, இப்போது இரண்டு ரூபாய் குறைத்துள்ளனர். இதெல்லாம் வெறும் கண் துடைப்பு. "நாங்கள் விலையை குறைத்தோம்' என்று கூறிக்கொள்வதற்காகவே, இவ்வாறு செய்துள்ளனர்.லத்தீப் (சிங்காநல்லூர்): குறைத்த விலையாவது சிறிது காலம் அப்படியே இருக்க வேண்டும். "குறைத்திருக்கிறோம்' என்ற எண்ணத்தில், வாய்ப்பு வரும்போது மீண்டும் தாறுமாறாக உயர்த்தி விடக்கூடாது. பக்ருதீன் (செல்வபுரம்): பெட்ரோல் விலையை பல முறை உயர்த்தி விட்டு, இப்போது வெறும் இரண்டு ரூபாய் மட்டும் குறைத்துள்ளனர். இது போதாது. குறைந்தபட்சம் ஐந்து ரூபாயாவது குறைக்கவேண்டும். அப்போது தான், வாகன ஓட்டிகளுக்கு பயனுள்ளதாக இருக்கும்; விலை குறைப்பின் தொடர் விளைவாக, மக்களுக்கும் பயன் கிடைக்கும்.மரியதாஸ் (கவுண் டம்பாளையம்): பெட்ரோல் விலை யை, தொடர்ந்து 13 முறை உயர்த்தியுள்ளனர். ஒரே ஒரு முறை மட்டும் தான் குறைத்துள்ளனர். அதுவும் இரண்டு ரூபாய் 35 பைசா. இதெல்லாம் வெறும் கண் துடைப்பு. மக்களுக்கு சிறிதும் பயனில்லை.ஸ்ரீராம் (கணபதி): "இந்த அளவுக்காவது விலையை குறைத்துள்ளார்களே' என்று எண்ணிக்கொள்ள வேண்டியது தான். அந்த வகையில், இந்த அறிவிப்பு பாராட்டத்தக்கது. எனினும், இந்த விலை குறைப்பு போதுமானதாக இல்லை. இன்னும் கொஞ்சம் குறைத்தால் தான், அனைத்து தரப்பு மக்களுக்கும் பயன் கிடைக்கும். லிஜோ

(சவுரிபாளையம்): அரசு முடிவு வரவேற்கத்தக்கது. இரண்டு ரூபாய் 35 பைசா அளவுக்கு பெட்ரோல் விலையை குறைத்து விட்டதை எண்ணி சந்தோஷப்படலாம். ஏதோ நல்லது நடந்தால் சரி.பாலு (ஆவாரம்பாளையம்): விலையை குறைத்துள்ள மத்திய அரசின் முடிவு வரவேற்கத்தக்கது தான். ஆனால், பெயரளவில் இரண்டு ரூபாய் மட்டும் குறைத்து விட்டு, அடுத்த சில நாட்களில் நான்கு ரூபாய் உயர்த்தி விடுவார்களோ என்று பயமாக இருக்கிறது.முருகன் (ராமநாதபுரம்): பெட்ரோல் விலையை பல முறை அடுத்தடுத்து உயர்த்தினர். மக்கள் மத்தியில் இருக்கும் அதிருப்தியை புரிந்து கொண்டு, இப்போது பெயரளவுக்கு கொஞ்சம் குறைத்துள்ளனர். குறைத்தவர்கள், இன்னும் கொஞ்சம் அதிகப்படியாக குறைத்திருந்தால், அனைவருக்கும் பயனுள்ளதாக இருக்கும். இரண்டு ரூபாய் 35 பைசா என்பதால், யாருக்கும் பெரிதாக லாபமில்லை.

**தஞ்சையில் வேளாண் தொழில்நுட்பஅலுவலர் சங்க பொதுக்குழு கூட்டம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 17,2011,03:08 IST

கருத்தை பதிவு செய்ய

தஞ்சாவூர்: தஞ்சையில் தமிழ்நாடு வேளாண்மை தொழில்நுட் ப அலுவலர் சங்கம் சார்பில் மாவ ட்ட பொதுக்குழு மற்றும் மாவ ட்ட ஒன்றிய நிர்வாகிகள் தேர்தல் தொடர்பான கூட்டம் நடந்தது.அம்மாப்பேட்டை வேளாண் மை உதவி அலுவலர் வெங்கடாஜலபதி வரவேற்றார். மாநில தலைவர் அயூப்கான் தலைமை வகித்தார். திருவோணம் துணை வேளாண்மை அலுவலர் முன்னிலை வகித்தார்.மாநில துணை தலைவர் காமாட்சிநாதன், முன்னாள் மாநில தலைவர் சந்திரஹாசன், கவுரவு ஆலோசகர் சண்முகபாரதி, முன்னாள் மாநில தலைவர் பாலசுப்பிரமணியன், முன்னாள் மாவட்ட செயலாளர் தமிழரசன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.வேளாண்மை உதவி அலுவலர் பதவியின் பொதுக்கல்வித் தகுதியை ப்ளஸ் 2 என்பதை வேளாண்மை, தோட்டக்கலை இரண்டாண்டு பட்டயம் என நிர்ணயம் செய்து, அரசாணையாக்கி தமிழக அரச உத்தரவிட வேண்டும். வேளாண்மைத்துறையில் விதை உற்பத்தி திட்டப்பணியை செய்துவரும் உதவி விதை அலுவலர்களை துணை வேளாண்மை அலுவலர்களாக உயர்நிலைப்படுத்தி உத்தரவிட வேண்டும்.பத்தாண்டுகள் பணி முடித்த உதவி வேளாண்மை அலுவலர்களை துணை வேளாண்மை அ லுவலர்களாக உயர்நிலைப்படுத்தி அரசாணை வழங்க வேண்டும்.இத்துறையில் அடிப்படை தொழில்நுட்ப பணியை செய்து வரும் இரண்டாண்டுகள் வேளாண்மை, தோட்டக்கலை, பட்டயதாரர்களின் பணி பொறுப்புகளை தற்போதைய விஞ்ஞான வளர்ச்சிக்கு ஏற்பவும், காலசூழ்நிலைக்கு ஏற்பவும் நிர்ணயம் செய்து வழங்க வேண்டும் ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன..

**நாளை விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 17,2011,03:06 IST

கருத்தை பதிவு செய்ய

அரியலூர்: அரியலூரில் நாளை 18ம் தேதி விவசாயிகள் குறைதீர்நாள் கூட்டம் நடக்கிறது.அரியலூர் கலெக்டர் அனு ஜார்ஜ் விடுத்துள்ள அறிக்கை: அரியலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்நாள் முகாம், நாளை 18ம் தேதி காலை 11 மணிக்கு, அரியலூர் மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில் நடக்கிறது.வேளாண்மை சம்பந்தப்பட்ட நீர்ப்பாசனம், வேளாண் கடனுதவிகள், வேளாண் இடுபொருட்கள், வேளாண் இயந்திரங்கள் மற்றும் விவசாய மேம்பாட்டுக்கான நலத்திட்டங்கள் பற்றிய முறையீடுகள் குறித்து விவாதிக்கப்படும். இக்கூட்டத்தில் விவசாயிகள் பலரும் திரண்டு வந்து, தங்களது வேளாண்மை சம்பந்தப்பட்ட குறைகளை தெரிவிக்கலாம்.

**நெல் உற்பத்தி பெருக்க பயிற்சி**

பதிவு செய்த நாள் : நவம்பர் 17,2011,02:47 IST

கருத்தை பதிவு செய்ய

லாலாப்பேட்டை: வேளாண் பல்கலை சார்பில் மேட்டுமகாதானபுரத்தில் நெல் உற்பத்தி பெருக்கும் புதிய தொழில் நுட்பங்கள் குறித்த பயிற்சி முகாம் நடந்தது. முகாமில் , நெல்நடவு புதிய முறைகள், அதிக அளவு நெல் சாகுபடி செய்ய பின்பற்ற வேண்டிய வழிமுறை குறி த்து விவசாயிகளுக்கு விள க்கம் அளிக்கப்பட்டது.

குளித்தலை எம்.எல்.ஏ., பாப்பாசுந்தரம்,சிறுகமணி கரும்பு ஆராய்ச்சி நிலைய முனைவர் மனோகரன், மேலாண் பயிர் இயக்குநர் ஜெயராமன், கிருஷ்ணராயபுரம் வேளாண் அலுவலர் விஜயகுமார் உள்பட பலர் பங்கேற்றனர்.

**தனியார் உரக்கடைகளில் உரங்கள்அதிக விலைகொடுத்தும் கிடைக்காமல்விவசாயிகள்தவிப்பு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 16,2011,22:39 IST

கருத்தை பதிவு செய்ய

தேனி:தேனி மாவட்டம் முழுவதும் விவசாய சாகுபடி மும்முரமாக நடந்து வரும் நிலையில், உரங்கள் பதுக்கப்படுவதால் கிடைக்காமல் விவசாயிகள் அவதிப்பட்டு வருகின்றனர்.தேனி மாவட்டத்தில் லோயர்கேம்ப் முதல் தேனி வரை முல்லை பெரியாற்று பகுதியில் இரண்டாம் போக

நெல் சாகுபடியும், பெரியகுளம், போடி, ஆண்டிபட்டி பகுதிகளில் இரண்டாம் போக நெல் சாகுபடியும் நடந்து வருகிறது.

தவிர மானாவாரி சாகுபடி, தோட்டக்கலை சாகுபடி என விவசாய பணிகள் மும்முரம் அடைந்துள்ளன.
ஆனால் விவசாயிகளுக்கு தேவையான உரங்கள் கிடைப்பதில்லை. பாக்டம்பாஸ், பொட்டாஷ், காம்ப்ளக்ஸ் உரங்கள் தனியார் கடைகளில் இல்லை என கூறுகின்றனர். அதே சமயம் அதிக விலைக்கு விற்கின்றனர். விவசாயிகளிடம் வாங்கும் அதிக விலைக்கு ஏற்ப பில் தருவதில்லை.இது பற்றி விவசாயத்துறையிடம் முறையீடு செய்தால், விவசாயிகள் அதிக விலை கொடுக்க வேண்டாம் என அறிவுரை மட்டும் கூறி வருகின்றனர். சாகுபடியை காப்பாற்ற வேறு வழியின்றி விவசாயிகள் உரங்களை அதிக விலை கொடுத்து வாங்க வேண்டி உள்ளது.உரங்களை பதுக்கி அதிக விலைக்கு விற்கும் உரக்கடைக்காரர்கள் மீது கலெக்டர் பழனிசாமி கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**திருந்திய நெல் சாகுபடியில்வயதான நாற்றுகளால் பாதிப்பு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 16,2011,22:45 IST

கருத்தை பதிவு செய்ய
தேனி:திருந்திய நெல் சாகுபடி முறையில் வயதான நாற்றுக்களை பயன்படுத்துவதால் பாதிப்பு ஏற்படும் என விவசாயிகள் அச்சத்தில் உள்ளனர்.
தேனி மாவட்டத்தில் தேனி, போடி, பெரியகுளம் பகுதியில் வடகிழக்கு பருவமழை தாமதம் காரணமாக திருந்திய நெல் சாகுபடி முறையில் 50 நாட்களுக்கு மேலான நாற்றுக்களை நடுகின்றனர். வழக்கமாக இந்த நடவுமுறையில் 14 நாட்கள் ஆன நாற்றுக்களை மட்டுமே நடவு செய்ய வேண்டும்.இப்போது 50 முதல் 60 நாட்கள் ஆன வயதான நாற்றுக்களை பயன்படுத்துவதால் சாகுபடி பாதிக்கும் என்ற அச்சம் விவசாயிகள் மத்தியில் நிலவுகிறது. தவிர வயதான நாற்றுக்களை பராமரிக்க தேவையான தொழில்நுட்பமும் வி வசாயிகளிடம் இல்லை. எனவே வி வசாயத்துறை வயதான நாற்றுக்களை பராமரிக்க தேவையான தொழில்நுட்பத்தை வழங்க வேண்டும்.

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

## கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம்

*துடியலூர்,நவ.17–*

*கோவையை அடுத்த துடியலூர் அருகே உள்ள பன்னிமடை ஊராட்சி திப்பனூர் கிராமத்தில் தமிழ்நாடு அரசு கால்நடை பராமரிப்பு துறை சார்பாக சிறப்பு கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம் நடைபெற்றது. முகாமிற்கு பன்னிமடை ஊராட்சி மன்ற தலைவர் கவி.சரவணக்குமார் தலைமை தாங்கினார். துடியலூர் கால்நடை மருத்துவர் டாக்டர் புவனேஸ்வரி வரவேற்று பேசினார். ஊராட்சி மன்ற உறுப்பினர் சவுந்தரராஜன் முன்னிலை வகித்தார்.*

*முகாமில் 114 ஆடு, மாடுகளுக்கு பொது சிகிச்சையும், 48 மாடுகளுக்கு சினைபரிசோதனையும் 30 மாடுகளுக்கு செயற்கை முறை கருவூட்டல், 150 ஆடு மாடுகளுக்கு தடுப்பூசி போடுதலும், 50 கால்நடைகளுக்கு மலட்டுத் தன்மை நீக்க சிகிச்சையும் 300 கால்நடைகளுக்கு குடல்புழு நீக்கல் செய்தலும், 175 கோழிகளுக்கு தடுப்பூசி போடுதல் போன்ற சிகிச்சைகள் அளிக்கப்பட்டன.*

*மற்றும் தீவன பயிர் வளர்ப்பு, பறவை காய்ச்சல், பன்றி காய்ச்சல் ஆகியவை குறித்து விழிப்புணர்வு தகவல் அளிக்கப்பட்டது. சிறந்த கலப்பின கிடாரி கன்றுக்குட்டிக்கு பன்னிமடை ஊராட்சி மன்ற தலைவர் கவி.சரவணக்குமார் பரிசு வழங்கினார். விழாவில் டாக்டர் நந்தாதேவி, கால்நடை ஆய்வாளர்கள், ஊர் கவுடர் அய்யாசாமி திப்பனூர் தேவராஜ், நித்தியானந்தன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.*



கோவை வேளாண்மை பல்கலைக்கழகத்தில் உள்ள தாவரவியல் பூங்காவில் பூத்து குலுங்கும் 'ஆர்கிட்' வகை மலர்களை படத்தில் காணலாம்.

### கோவை வேளாண் பல்கலைக்கழக மலர்கண்காட்சி ஏற்பாடுகள் தீவிரம்

# பூத்துக் குலுங்கும் வண்ண ஆர்கிட் - அந்தூரியம் மலர்கள்

கோவை, நவ.17-

வேளாண் பல்கலைக்கழக மலர் கண்காட்சிக்காக தாவரவியல் பூங்காவில் வண்ண ஆர்கிட் மற்றும் அந்தூரியம் மலர்கள் பூக்க தொடங்கி விட்டன.

## மலர் கண்காட்சி

கோவையில் உள்ள வேளாண் பல்கலைக்கழகம் மற்றும் ரோட்டரி அப்டவுன் சார்பில் 5-வது மலர் கண்காட்சி பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள தாவரவியல் பூங்காவில் வருகிற ஜனவரி மாதம் 6-ந் தேதி தொடங்கி 8-ந் தேதி வரை 3 நாட்கள் நடக்கிறது.

மலர்களை பரிமாறி எண்ணங்களை வெளிப்படுத்துங்கள் என்ற மையக்கருத்துடன் நடைபெறும் இந்த மலர் கண்காட்சியில் தாவரவியல் பூங்காவில் உள்ள உதிரி பூக்களான செவ்வந்தி, ஆஸ்டர், பெட்டூனியா, சால்வியா, பேன்சி மற்றும் கொய்மலர்களான ரோஜா, ஆந்தூரியம், ஆர்கிட், ஜெர்பரா, லில்லியம் போன்ற மலர்கள் கலை நயத்துடன் அழகாக அணிவகுக்கப்பட்டு அலங்காரத்துடன் வைக்கப்பட உள்ளன.

## கொய்மலர்கள்

மேலும் ஒசூர், பெங்களூர், ஏற்காடு, ஊட்டி, கொடைக்கானல், சிம்லா, காஷ்மீர், பூனா ஆகிய இடங்களில் பயிராகும் கொய்மலர் மற்றும் உதிரி மலர்கள், மற்றும் தாய்லாந்து, தென் அமெரிக்கா, ஆலந்து ஆகிய நாடுகளில் உள்ள ஆர்கிட்ஸ் மலர்கள் கண்காட்சியில் இடம் பெறுகின்றன.

இதே போல் போன்சாய் என்னும் குட்டை செடி அலங்காரங்கள், உலர் மலர் அலங்காரங்கள், இக்கிேனா என்ற பெயரை கொண்ட ஜப்பான் நாட்டைச் சேர்ந்த மலர் அலங்காரம், காய்கறி உருவ அலங்காரம் என 250-க்கும் மேற்பட்ட ரகங்களுடன் கூடிய 2 லட்சத்துக்கும் அதிகமான மலர்கள் கண்காட்சியில் இடம் பெறுகிறது.

## ஆர்கிட் மலர்கள்

இதற்காக தற்போது வேளாண் பல்கலைக்கழக தாவரவியல் பூங்காவில் பல்வேறு வகையான மலர்களை வளர்க்கும் பணி தொடங்கி உள்ளது. குறிப்பாக அங்கு உள்ள பசுமைகுடிலில் தொட்டிகளில் வளர்க்கப்பட்டு வரும் ஆர்கிட் மலர்கள் பூக்க தொடங்கி உள்ளன.

குறிப்பாக வெள்ளை மற்றும் ஊதா நிறம் கொண்ட டென்ரோபியம், மஞ்சள் நிறம் கொண்ட டான்சிங் டால். லைட் பிங்க், மஞ்சள் மற்றும் மெருன் கலர் கொண்ட ஆர்கிட், முழுவதும் வெள்ளை நிறம் கொண்ட டென்ரோபியம் சிவப்பு நிறத்தில் உள்ள ஆந்தூரியம் ஆகியவையும் பூக்க தொடங்கி விட்டன. முழுவதும் அழகுக்காகவே அதுவும் காண்பதற்கு கண்கொள்ளா காட்சியாக அளிக்கும் வருடாந்திர மலர்கள் என்று அழைக்கப்படும் ரோஸ் கலர் கொண்ட ஜின்னியா, மஞ்சள் நிறம் கொண்ட காஸ்மாஸ் ஆகிய பூக்களும் பூத்துக் குலுங்குகின்றன.



# வேளாண்மை செய்திகள்

## வெங்காய பயிரை தாக்கும் பூச்சிகளை கட்டுப்படுத்தும் வழிமுறை

தமிழகத்தின் பெரும்பாலான இடங்களில் வெங்காயம் அதிக அளவில் பயிர் செய்யப்படுகிறது. தொன்று தொட்டு உழவர்களால் பயிர் செய்யப்படும் வெங்காயத்தை பல்வேறு பூச்சி இனங்கள் தாக்கி அதிக பொருளாதார சேதத்தை ஏற்படுத்துகின்றன. குறிப்பாக இலைப்பேன், சாம்பல் நிற ஈ, வெட்டுப்புழு ஆகியவற்றின் தாக்குதல் அதிகமாக இருப்பதால் அதன் வளர்ச்சி பாதிக்கப்பட்டு உற்பத்தி குறைகிறது.

### இலைப்பேன்

குறிப்பாக வெங்காயத்தில் காணப்படும் இலைப்பேன் பூச்சி வெளிர் மஞ்சள் நிறத்தில் காணப்படும். இந்த பூச்சிகள் இலைகளை சுரண்டி உறிஞ்சும். இதனால் இலைகள் வெண் திட்டுகளாக காணப்படும். இதன் காரணமாக இலைகள் அதன் நுனியில் இருந்து வாடும். இதை கட்டுப்படுத்த எக்டேருக்கு மீதைல் டெமட்டான் 500 மில்லி மற்றும் பாஸ்போமிடான் 300 மில்லி தெளிக்க வேண்டும். இதன் தாக்குதலில் இருந்து வெங்காயத்தை காப்பாற்ற அதிக தழைச்சத்து இடுவதையும், நெருங்கி நடுவதையும் தவிர்க்க வேண்டும்.

மேலும் வெங்காயத்தில் சாம்பல் நிற ஈக்கள் மண்ணில் உள்ள இடுக்குகளில் முட்டையிடும். அவற்றில் இருந்து வரும் சிறிய வெண்ணிறப்புழுக்கள் நிலத்தடியில் உள்ள தண்டுப்பகுதி மற்றும் வளர்ந்து வரும் வெங்காயத்தை துளைத்து தின்று அழுகச் செய்யும். இதை கட்டுப்படுத்த மீதைல் டெமட்டான் 25 இ.சி 1 மில்லி மருந்தை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். அல்லது மோனோகுரோட்டோபாஸ் ஒரு மில்லி மருந்துடன் டைகோபால் 0.5 மில்லி மருந்தை 1 லிட்டர் தண்ணீரில் கலந்த கலவையுடன் தெளித்து கட்டுப்படுத்தலாம்.

### வெட்டுப்புழு

இந்தப்புழுக்கள் வெங்காயத்தில் உள்ள இலைகளை அரித்து சல்லடை போன்று ஆக்கும். மேலும் வளர்ச்சி அடைந்த புழுக்கள் வெங்காயத்தாள்களை கடித்து வெட்டி சேதப்படுத்தும். இதை கட்டுப்படுத்த குளோர்பைரிபாஸ் 2 மில்லி மருந்தை கலந்து மண்ணில் ஊற்ற வேண்டும்.

இந்த புழுக்களை கட்டுப்படுத்த வரப்பு ஓரங்களில் ஆமணக்கு செடியை கவர்ச்சிப் பயிராக பயிரிட்டு கட்டுப்படுத்தலாம். இதே போல் வெங்காயத்தில் உள்ள இலைகளில் சந்தனப்பொட்டு போன்ற முட்டைக் குவியல்கள் கூட்டம் கூட்டமாக காணப்படும். இந்த புழுக்களை ஒன்றாக சேகரித்து அழிக்க வேண்டும்.

தகவல்:- வேளாண் வேளாண் பல்கலைக் கழகம், கோவை.

## வருமானம் தரும் வாசனைப்பயிர் 'கொத்தமல்லி'

மத்திய தரைக்கடல் பகுதியை தாயகமாக கொண்ட வாசனைப்பயிர் கொத்தமல்லி. ஓராண்டு பயிரான கொத்தமல்லி மானாவாரியிலும், இறவையிலும் சாகுபடி செய்ய ஏற்றது. இதன் இலை, தண்டு, பூ, விதை ஆகிய அனைத்தும் உணவுப்பொருட்களில் வாசனைக்காகவும், சுவைக்காகவும் சேர்க்கப்படுகின்றன. இதன் விதையில் இருந்து எடுக்கப்படும் ஓலியோரசின் என்ற வேதிப்பொருள் உணவுப் பொருட்களில் வாசனைக்காக சேர்க்கப்படுகிறது.



### கொத்தமல்லி சாகுபடி

கொத்தமல்லி இந்தியாவில் தமிழ்நாடு, கர்நாடகா, ஆந்திரா, ராஜஸ்தான், குஜராத் மாநிலங்களில் வளர்க்கப்படுகிறது. நாட்டு கொத்தமல்லி ரகங்களில் பூஞ்சாண் நோய், நூற்புழுக்கள் தாக்குதலின், எதிர்ப்பு சக்தி குறைவாக இருப்பதால் விளைச்சல் குறைந்து விடும்.

ஆனால் நோய் எதிர்ப்பு சக்தி கொண்ட கோ-1, கோ-2, கோ-3, கோ(சி.ஆர்)4, குஜராத் கொத்தமல்லி, ஆர்.சி.ஆர்.41, சுவாதி, சாதனா ஆகிய புதிய ரகங்கள் அதிக விளைச்சல் தரக்கூடியவை. கொத்தமல்லி வளம் நிறைந்த அனைத்து மண்வகைகளிலும் வளரக்கூடியவை. நல்ல வடிகால் வசதியுள்ள நிலம் சாகுபடிக்கு ஏற்றது. மானாவாரி சாகுபடிக்கு கரிசல்மண் பூமி மிகவும் ஏற்றது. மண்ணின் கார அமில அளவு 6.5 முதல் 8.0 வரை இருப்பது சாகுபடிக்கு சிறந்தது.

### விதைப்பு முறை

வெப்பமண்டல பயிரான கொத்தமல்லி அதிக வெப்பத்தையும், வறட்சியையும் தாங்கி வளரக்கூடியது. வெப்பநிலை சராசரியாக 20 முதல் 25 டிகிரி செல்சியஸ் பயிர் வளர்ச்சிக்கு ஏற்றது. கீரைக்காக ஆண்டு முழுவதும், விதைக்காக ஜூன்-ஜூலை அல்லது அக்டோபர்-நவம்பர் மாதங்களிலும், மானாவாரியில் அக்டோபர்-நவம்பர் மாதத்திலும் பயிரிடலாம்.

நடவுக்கு முன் நிலத்தை 4 முறை உழ வேண்டும். எக்டேருக்கு 10 டன் மக்கிய தொழு உரம் அல்லது மக்கிய குப்பைகளை இட்டு நன்கு கலக்க வேண்டும். மானாவாரி சாகுபடிக்கு 20 முதல் 25 கிலோ விதையும், இறவை சாகுபடிக்கு 10 முதல் 12 கிலோ விதையும் தேவைப்படும். விதைகளை தரையில் நன்றாக தேய்த்து 2-ஆக உடைத்து கொள்ள வேண்டும். உடைத்த விதைகளை 12 முதல் 24 மணி நேரம் ஊறவைத்து விதைப்பதன் மூலம் முளைப்புத்திறனை அதிகரிக்கலாம்.

### அறுவடை-மகசூல்

அதிக மகசூல் பெற தொழு உரம், தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்து ஆகியவற்றை இட வேண்டும். உயிர் உரமான அசோஸ்பைரில்லத்தை எக்டேருக்கு 2 கிலோ என்ற அளவில் மக்கிய தொழு உரத்துடன் கலந்து இட வேண்டும். மண்ணின் ஈரத்தன்மையை பொறுத்து 7 முதல் 10 நாட்களுக்கு 1 முறை நீர்ப்பாசனம் செய்ய வேண்டும்.

பூச்சி மற்றும் நோய்களை கட்டுப்படுத்த பரிந்துரைக்கப்பட்ட மருந்துகளை பயன்படுத்த வேண்டும். விதைக்கப்பட்ட 30-40 நாட்களில் கீரையையும், 140 நாட்களில் விதைகளையும் அறுவடை செய்யலாம். இறவையில் எக்டேருக்கு 700 முதல் 1000 கிலோ விதைகளும், மானாவாரியில் எக்டேருக்கு 500 முதல் 550 கிலோ வரை விளைச்சல் கிடைக்கும். இதனால் விவசாயிகள் அதிக வருமானம் பெற்று பயன் பெற முடியும்.

-தகவல்: **கணேசராஜா, கவிதா,**
வேளாண்மை அறிவியல் நிலையம்,
ராமநாதபுரம்.

### அதிக விளைச்சலுக்கு புதிய தொழில்நுட்பம்

## அடர் நடவு முறையில் முந்திரி சாகுபடி

தரிசு நிலத்தின் தங்கம் என்று முந்திரி அழைக்கப்படுகிறது. இதன் தேவை நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. அந்நிய செலாவணி மூலம் நாட்டுக்கு ரூ.2,700 கோடி வருமானம் பெற்றுத்தரும் முந்திரிக்கு உள்நாடு மற்றும் வெளிநாட்டு சந்தைகளில் பெரும் வரவேற்பு உள்ளது. தேவை அதிகரிக்க விலையும் அதிகரித்து கொண்டே வருகிறது.

### முந்திரி ரகங்கள்

அதிக விளைச்சல் தருவதில் வி.ஆர்.ஐ.-2, வி.ஆர்.ஐ.-3, வி.ஆர்.ஐ.எச்.-1 ஆகிய ரகங்கள் சிறந்த ரகங்களாக உள்ளன. நாளுக்கு நாள் குறைந்து வரும் விவசாய நிலங்களை நுட்பமான முறையில் பயன்படுத்தி, குறுகிய நிலப்பரப்பில் அதிக விளைச்சல், அதிக வருமானம் ஈட்டுவதற்கு அடர்நடவில் முந்திரி சாகுபடி செய்யலாம் என்று கண்டறியப்பட்டு உள்ளது.

பொதுவாக தொன்று தொட்டு முந்திரி மரங்களை காடுகள் போல, விதைக்கன்றுகள் மூலம் உருவாக்கி சரியான பயிர் எண்ணிக்கை இல்லாமலே அறுவடை செய்யப்பட்டு வந்தது. இதனால் எக்டேருக்கு 30 முதல் 50 மரங்களே இருக்கும். விளைச்சலும் குறைவாக இருக்கும். ஆனால் அடர் நடவு முறையை பின்பற்றினால் எக்டேருக்கு 3 ஆயிரம் கிலோ விளைச்சலாக கிடைக்கும்.

### சாகுபடி முறை

செம்மண், மணல், மணற்பாங்கான அனைத்து மண் வகைகளும் முந்திரி சாகுபடிக்கு ஏற்றது. களிமண், சரளை, பாறை நிலங்கள் ஏற்றதல்ல. சாகுபடி செய்யும் மண்ணின் ஆழம் 1½ மீட்டர் இருக்க வேண்டும். நல்ல வெப்ப மண்டலங்களிலும், கடற்கரையோர மாவட்டங்களிலும், மலையடிவாரங்களிலும் முந்திரி செழித்து வளரும் தன்மை கொண்டது.

காற்றின் ஈரப்பதம் 90 சதவீதத்திற்கு மேல் இருந்தால் நல்ல பூ, காய்ப்பிடிப்பு, விளைச்சலை பெற முடியும். பருவமழை காலங்களில் 3 மாத வயதுடைய ஒட்டுக்கன்றுகளை நடவு செய்வது நல்லது.



நடவுக்கு முன் எக்டேருக்கு 12 டன் தொழு உரமிட்டு நிலத்தை பண்படுத்த வேண்டும். பின்னர் 45 செ.மீ. நீளம், அகலம், ஆழமுள்ள குழிகளை 5*4 மீட்டர் இடைவெளியில் எடுக்க வேண்டும்.

### விளைச்சல்-வருமானம்

1 குழிக்கு 10 கிலோ தொழு உரம் மற்றும் வேப்பம் புண்ணாக்கு இட்டு நடவு செய்ய வேண்டும். ஒட்டுப்பகுதி நிலத்துக்கு மேல் இருப்பது அவசியம். மழை குறைவாக இருந்தால் நாள்தோறும் நீர்ப்பாசனம் செய்து கன்றுகளை பராமரிக்க வேண்டும். பயிர் எண்ணிக்கையே அடர்நடவு முறையில் மூலாதாரமாகும். எக்டேருக்கு 500 கன்றுகளை நட்டு, எண்ணிக்கை குறையாமல் பாதுகாத்து வளர்க்க வேண்டும்.

வேர் அழுகல், கறையான் போன்றவற்றால் பயிர்கள் பாதிக்கப்பட்டால் உடனடியாக மறுநடவு செய்வது நல்லது. முந்திரி கன்றுகளை நடவு செய்த 3-ம் வருடம் காய்க்க தொடங்கி விடும். முறையான பராமரிப்பின் மூலம் 1250 கிலோ முந்திரி கொட்டைகளை விளைச்சலாக பெறலாம். அதன்படி எக்டேருக்கு ரூ.70 ஆயிரம் வருமானமாக கிடைக்கும். எனவே விவசாயிகள் அடர் நடவு முறையில் முந்திரி சாகுபடி செய்து பயன்பெறலாம்.

—தகவல்: **வைத்தியநாதன், ஜீவா,**
**அனிசா ராணி,** மண்டல ஆராய்ச்சி
நிலையம், விருத்தாச்சலம்.